பாதிரிக்கை செய்தி -
PRESS RELEASE

இந்திய ரிசர்வ் வங்கி
RESERVE BANK OF INDIA

இணையதளம் : www.rbi.org.in/தமிழ்
Website : www.rbi.org.in
மின்னஞ்சல் /email : helpdoc@rbi.org.in

தகவல் தொடர்புத் துறை, மத்திய அலுவலகம், ஷாஹித் பகத் சிங் மார்க், கோட்டை, மும்பை-400001 தொலைபேசி: 022- 22660502

Department of Communication, Central Office, Shahid Bhagat Singh Marg, Fort, Mumbai-400001 फोन/Phone: 022- 22660502

மே 19, 2023

**₹2000 மதிப்புள்ள பணத்தாள்கள் –**
**புழக்கத்தில் இருந்து திரும்ப பெறுதல்; சட்டப்படி செல்லுபடியாகும் ரூபாய் நோட்டாக தொடரும்**

நவம்பர் 2016 இல் புழக்கத்தில் இருந்த அனைத்து ₹500 மற்றும் ₹1000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளின் சட்டப்பூர்வ செல்லுபடி நிலையை திரும்பப் பெற்ற பிறகு, பொருளாதாரத்தின் பணத் தேவையை விரைவாகப் பூர்த்தி செய்யும் விதமாக, ரிசர்வ் வங்கி சட்டம், 1934 இன் பிரிவு 24(1) இன் கீழ் ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் இதர மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் போதுமான அளவில் புழக்கத்திற்கு வந்த பிற்பாடு நிறைவேறியது. எனவே, 2018-19ல் ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை அச்சடிக்கும் செயல்முறை நிறுத்தப்பட்டது.

2. மார்ச் 2017 க்கு முன் வெளியிடப்பட்ட சுமார் 89% ₹2000 மதிப்புள்ள இந்த ரூபாய் நோட்டுகள் அவற்றின் கணிக்கப்பட்ட ஆயுட்காலமான 4-5 ஆண்டுகளின் இறுதிக்கட்டத்தில் உள்ளன. புழக்கத்தில் உள்ள இந்த ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு, மார்ச் 31, 2018 அன்று உச்சகட்ட மதிப்பான ₹6.73 லட்சம் கோடியிலிருந்து (புழக்கத்தில் உள்ள நோட்டுகளில் 37.3%) ₹3.62 லட்சம் கோடியாகக் குறைந்து மார்ச் 31, 2023 அன்று புழக்கத்தில் உள்ள நோட்டுகளில் 10.8%-ஆக அமைந்துள்ளது. இத்தகைய அதிக மதிப்பு ரூபாய் நோட்டுகள் பொதுவான பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்தப்படுவதில்லை என்பதும் காணப்படுகிறது. மேலும், பொதுமக்களின் பணத் தேவையை பூர்த்தி செய்ய இதர மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளின் இருப்பும் போதுமானதாக உள்ளது.

3. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டும் இந்திய ரிசர்வ் வங்கியின் “சுத்தமான நோட்டுக் கொள்கையின்” அடிப்படையிலும், ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் இருந்து திரும்பப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் தொடர்ந்து சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும்.

5. இந்திய ரிசர்வ் வங்கி 2013-2014 ஆம் ஆண்டிலும் இதேபோன்று புழக்கத்தில் இருந்த ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

6. அதன்படி, பொதுமக்கள் ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை தங்கள் வங்கிக் கணக்கில் வைப்பில் வைக்கலாம் மற்றும்/அல்லது எந்த வங்கிக் கிளையிலும் இதர மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளாக மாற்றிக்கொள்ளலாம். வங்கிக் கணக்குகளில் வழக்கமான முறையில், எவ்விதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல், தற்போதுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் பிற சட்டப்பூர்வ விதிகளுக்கு உட்பட்டு வைப்பு வைக்கப்படலாம்.

7. செயல்பாட்டு வசதிக்காகவும், வங்கிக் கிளைகளின் வழக்கமான செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்க்கவும், மே 23, 2023 முதல் எந்த ஒரு வங்கியிலும் ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை இதர மதிப்பு ரூபாய் நோட்டுகளாக ஒரு முறைக்கு ₹20,000/- என்ற வரம்பு வரை மாற்றிக்கொள்ளலாம்.

8. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இந்தப் பயிற்சியை முடிக்கவும், பொதுமக்களுக்கு போதுமான நேரத்தை வழங்கவும், அனைத்து வங்கிகளும் செப்டம்பர் 30, 2023 வரை ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை வைப்பு வைத்தல் மற்றும்/அல்லது மாற்றம் செய்யும் வசதியை வழங்க வேண்டும். வங்கிகளுக்கு இது தொடர்பான தனி வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

9. ஒரே நேரத்தில் ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை ₹20,000/- வரை மாற்றுவதற்கான வசதி மே 23, 2023 முதல் வழங்கல் துறையைக்[1] கொண்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் 19 மண்டல அலுவலகங்களிலும் வழங்கப்படும்.

10. ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதை உடனடியாக நிறுத்துமாறு வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

11. ₹2000 மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை வைப்பு வைப்பதற்கும் மற்றும்/அல்லது மாற்றுவதற்கும் செப்டம்பர் 30, 2023 வரையிலான நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) பற்றிய ஆவணம் பொதுமக்களின் தகவல் மற்றும் வசதிக்காக ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**(யோகேஷ் தயாள்)**

**பத்திரிக்கை வெளியீடு: 2023-2024/257** தலைமை பொது மேலாளர்

---

[1] அஹ்மதாபாத், பெங்களூர், பேலாபூர், போபால், புவனேஸ்வர், சண்டிகர், சென்னை, குவஹாத்தி, ஹைத்ராபாத், ஜெய்பூர், ஜம்மு, கான்பூர், கொல்கத்தா, லக்னோ, மும்பை, நாக்பூர், நியூ டெல்லி, பாட்னா மற்றும் திருவனந்தபுரம்